# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ஆம் நாள், வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள். 1**

அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணியினை திரு. ஆர். குருசாமி, திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு பிடித்தம் செய்யப்பட்ட காப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு ஒப்பந்ததாரரின் கடிதம் உதவி ஆணையர் (கணக்குகள்), திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் ந.க.எண். பி5/156 /2020, நாள்.15.09.2020ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கீழ்கண்டுள்ள பணி மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | | |
| | | | | **தொகுப்பு** | **ப.எண்** | **வ.எண்** |
| 1 | வார்டுஎண் 25க்குட்பட்ட கீழ **கிருஷ்ணன் கோவில் தெருவில் பழுதடைந்த சிமெண்ட் கான்கிரீட் சாலை சீரமைத்தல் பணி மதிப்பீடு ரூ.1.65 லட்சம்** இ3/8505/16 | 29.12.16 Emd<br>18.01.17 FD<br><br>17.04.17 (SD) 4% | 1700.00<br><br>1700.00<br><br>6146.00 | செலுத்துச் சீட்டு எண்.3165113047 / நாள்.29.12.2016 அரியமங்கலம் கோட்டம்<br>செலுத்துச் சீட்டு எண்.316511857 / நாள்.18.01.2017 அரியமங்கலம் கோட்டம்<br>X | <br><br><br>5 | <br><br><br>61 |
| | **மொத்தம்** | **Emd<br>SD** | **3400.00<br>6146.00** | - | - | - |

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.6,146/-ல் மற்றும் வைப்புத் தொகை ரூ.3,400/—ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு. ஆர். குருசாமி, திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின்அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.6146/-ல் மற்றும் வைப்புத் தொகை ரூ.3,400/—ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/6680/2021(மையம்)**

**தீர்மானம் எண்.430 (பொருள்—1): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் , திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வரையறுக்கப்பட்ட (ABD Area) பகுதிகளில் கழிவுநீர் வினியோக குழாய் சீரமைக்கும் பணி மற்றும் பஞ்சப்பூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 7.5 MLD அமைக்கும் பணிக்கு 13வது மாநில உயர்மட்ட நிலைக்குழுவில் 05.11.2020ல் ஒப்புதல் அளித்துள்ளது . மேற்படி திட்டத்திற்கு கூடுதல் தலைமைப் பொறியாளர் , நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் கடிதம் எண் . 5410/2020/DO2 நாள்.08.12.2020 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது . மேற்படி திட்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் .151/2020-21 நாள். 29.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து , 2ம் அழைப்பாக 24.02.2021 அன்று கோரப்பட்டதில் மெசர்ஸ். ஈகோ புரடெக் ஷன்ஸ் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட் , சென்னை நிறுவனம் மதிப்பீட்டை காட்டிலும் 45.10% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேலும் ஒப்பந்ததாரரின் பழுது மற்றும் பராமரிப்பு விலைப்புள்ளியினை ஏற்று மதிப்பாய்வு செய்யப்பட்டதில் , மதிப்பீட்டைக்காட்டிலும் 27.99% கூடுதலாக கொடுத்துள்ளதைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்து விட்டு , 23.06.2021 அன்று மூன்றாம் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது . மேற்படி ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப ஆவணங்களை சரிபார்க்கப்பட்டதில், தொழில் நுட்ப தகுதி பெறவில்லை.

இந்நிலையில், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை அவர்களின் 04.07.2021 ம் அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் சீர்மிகு திட்டத்தின் கீழ் நடைபெற உள்ள பஞ்சப்பூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 7.5 MLD மற்றும் அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று கொண்டிருக்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் புணரமைக்கும் 30 MLD பணி ஆகிய பணிகளை நிறுத்தி விட்டு , புதியதாக பஞ்சப்பூரில் 100 MLD கொள்ளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது . இதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் எண் .இ7/4717/2021(மையம்) நாள்.07.07.2021 வாயிலாக பணியினை நிறுத்தம் செய்ய அனுமதி கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

எனவே, சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் , பஞ்சப்பூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 7.5 MLD அமைக்கும் பணியினை நிறுத்தம் செய்ய நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு.</u>

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. பஞ்சப்பூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 7.5 MLD அமைக்கும் பணியினை நிறுத்தி வைக்கவும், தொலைநோக்கு பார்வையில் பஞ்சப்பூரில் 100 MLD கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பலாம்.

3. இப்பணிக்கு ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகையினை திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ7/921/2021(மையம்)**

**தீர்மானம் எண்.431 (பொருள்–2): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைக் கோட்டம் பஞ்சப்பூர் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால், மேற்படி இடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்கு, முதற்கட்டமாக மேற்படி நிலத்தின் தன்மையினை ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

மேற்படி நிலத்தில் மண் பரிசோதனை செய்து அறிக்கை தருமாறு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகம் பொறியியல் தொழில்நுட்ப கல்லூரி கட்டுமானத்துறை தலைமை பேராசிரியரிடம் 08.07.2021ம் தேதிய கடிதத்தின் வழி கோரப்பட்டது. மேற்படி பொறியியல் தொழில்நுட்ப கல்லூரியிலிருந்து வரப்பெற்ற கடிதம் எண்.AUC/Consultancy/Invoice/002/ஜீலை நாள். 16.07.2021ல் மேற்படி பணியினை மேற்கொண்டமைக்கான கட்டணத் தொகை ரூ.8,26,000/–ஐ உடன் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கட்டணத் தொகையினை மேற்கண்ட பொறியியல் தொழில்நுட்ப கல்லூரிக்கு வழங்குவதற்கு தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண்.இ1(மை)/4343/2021**

**தீர்மானம் எண்.432 (பொருள்–3): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், 206 அலுவலக கட்டிடங்களின் மேற்கூரையில் சூரியஒளி மின்னாற்றல் தகடுகள் அமைத்து, 831 Kwp அளவிற்கு மின்சாரம் தயார் செய்யும் பணியினை ரூ.6.44 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, மெசர்ஸ். கிரீன் பீல்டு சோலார் சொலியூசன் பி.லிட்., சென்னை நிறுவனத்திற்கு 19.06.2019ம் தேதியன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருவதில், பின்வரும் பட்டியலில் கண்டுள்ள மாநகராட்சி அலுவலக கட்டிடங்களுக்கான மின்னிணைப்புகளுக்கு Net Metering அமைப்பதற்கான கேட்பு தொகையினை செலுத்தக்கோரி மின்வாரிய அலுவலகத்திலிருந்து பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | கோட்ட அலுவலகம் | மின்னிணைப்பு எண். | Net Metering கேட்புத் தொகை ரூ. | மாநகராட்சி கட்டிடங்களின் விபரம் | திறன் |
|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீரங்கம் | 262-011-509 | 8625 | மாநகராட்சி பள்ளி கட்டிடம்,<br>பாரதியார் தெரு, கீழகொண்டையம் பேட்டை. | 4.5 Kw |
| 2 | கோ.அபிஷேகபுரம் | 203-068-4671 | 8625 | மீன்சந்தை கட்டிடம்,<br>காசிவிளங்கி, லிங்கம் நகர், உறையூர்,<br>திருச்சிராப்பள்ளி. | 4.0 Kw |
| 3 | பொன்மலை | 212-049-73 | 7627 | மாநகராட்சி மைய அலுவலக கட்டிடம்,<br>பாரதிதாசன் சாலை | 50.0 Kw |
| 4 | பொன்மலை | 212-049-691 | 2197 | ஆணையர் கூட்ட அரங்க கட்டிடம்,<br>மாநகராட்சி மைய அலுவலக வளாகம்,<br>பாரதிதாசன் சாலை. | 20.0 Kw |
| 5 | பொன்மலை | 212-049-74 | 7627 | கன்டோன்மென்ட் மேல்நிலை<br>நீர்தேக்கத்தொட்டி, | 48.0 Kw |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மாநகராட்சி மைய அலுவலக வளாகம், பாரதிதாசன் சாலை. | |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள கேட்புத் தொகைகளை தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்திற்கு **(SE/TEDC/METRO/TANGEDCO/TRICHY)** கணினி வலைத்தளம் வழியாக RTGS மூலம் செலுத்துவதற்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப் படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட கட்டணத் தொகைகளை திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகர திட்ட நிதியிலிருந்து வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ2/5380/2018(மையம்)**

**தீர்மானம் எண்.433 (பொருள்–4): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ– அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் இரண்டாவது அலை தொடங்கி நாள்தோறும் அதிகரித்து வருவதால் இம்மாநகராட்சி கொரோனா வைரஸ் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இந்நோய் பரவல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்காக இம்மாநகராட்சி கோ–அபிஷேகபுரகோட்டத்திற்குட்பட்ட வார்டுகளில் பணிபுரிய வார்டுக்கு 202 நபர்கள் தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட்டு அனைத்து வார்டுகளிலும் வீடுகள் தோறும் சென்று கணக்கெடுப்பு பணி மேற்கொண்ட தற்காலிக பணியாளர்கள் பணிபுரிந்த (30.05.2021 முதல் 22.06.2021 வரை 19 நாட்களில்) 2626 வேலை நாட்களுக்கு X நாள் ஒன்றுக்கு ரூ. 500/– வீதம் = மொத்தம் ரூ. 13,13,000/– ஐ தற்காலிக பணியாளர்களுக்கு வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

கோவிட் 2019 கணக்கெடுப்பு பணிக்கு தற்காலிக பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு அவர்கள் பணிபுரிந்த காலத்திற்கு 2626 வேலை நாட்கள் X நாள் ஒன்றுக்கு ரூ.500 வீதம் தினக்கூலி உத்தேச செலவினம் ரூ.13,13,000/–க்கு அனுமதி அளிக்கலாம்.

**சி4/11465/2021(கோ.அபி)**

**தீர்மானம் எண்.434 (பொருள்–5): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உய்யகொண்டான் கால்வாய் 8 கி.மீ நீளத்தில் கோ அபிஷேகபுரம் கோட்டம், பொன்மலைக் கோட்டம் மற்றும் அரியமங்கலம் கோட்டம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி செல்கிறது. உய்யகொண்டான் கால்வாயில் செல்லும் நீரானது விவசாயத்திற்காக பயன்படுத்தப் பட்டு வருகிறது.

இக்கால்வாயில் கழிவுநீர் கலப்பது தொடர்பாக தேசிய பசுமை தீர்ப்பாயம் மூலம் வழக்கு எண்.112 of 2020 வழக்கு விசாரிக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 26.07.2021 அன்று நடைபெற்ற சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள பாதாள சாக்கடை திட்ட பணிகளின் துவக்க விழாவின் போது, உய்யகொண்டான் வாய்க்காலில் கழிவுநீர் கலப்பது முற்றிலும் தடுப்பதற்கு விரிவான அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்குமாறு கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருச்சி அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி அவர்களுக்கு உய்யகொண்டான் வாய்க்காலில் கழிவுநீர் கலக்காத வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய இ7/6311/2020(மையம்) கோப்பின் வாயிலாக 28.07.2021 அன்று கோரப்பட்டது.

கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி அவர்களது கடிதம் எண்.Lr.No.29721/F.Trichy City Corporation/AE1/2021/Dt. 29.07.2021ம் நாளைய கடிதத்தில் இப்பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது ஒத்திசைவு பெற்று, தீர்மான நகலுடன் அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது.

எனவே, உய்யகொண்டான் வாய்க்காலில் கழிவுநீர் கலப்பது முற்றிலும் தடுப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் ஒத்திசைவு (Concurrance) வழங்க கோருவதற்கு, அனுமதி கோரி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு மன்றப் பொருள் தயார் செய்து வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. உய்யகொண்டான் வாய்க்காலில் கழிவுநீர் கலப்பது முற்றிலும் தடுப்பதற்கு விரிவான அறிக்கை (Detailed Project Report) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயார் செய்து அனுப்ப அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பலாம்.

**இ7/7214/2021(மையம்)**

**தீர்மானம் எண்.435 (பொருள்—6): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

கொரோனா வைரஸ் பெருந்தொற்று பரவலை தடுக்க இம்மாநகராட்சியில் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவல் இரண்டாவது அலை தொடங்கி ஒவ்வொரு நாளும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் இருந்தமையால் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கை அவசர அவசியம் கருதி மாவட்ட நலவாழ்வு சங்கம் மற்றும் மாவட்ட ஆட்சிதலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் ஒப்புதல் பெறப்பட்ட 18 மருத்துவ அலுவலர்களை முற்றிலும் ஒப்பந்த அடிப்படையில் ஒரு நபருக்கு மாத ஊதியம் ரூ.60,000/- வீதம் தற்காலிக அடிப்படையில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் 20.05.2021 முதல் தேர்வு செய்யப்பட்ட 12 மருத்துவ அலுவலர்களில் 8 மருத்துவ அலுவலர்கள் மட்டும் பணியில் சேர்ந்து தற்போது பணிபுரிந்து வரும் நிலையில் 20.05.2021 முதல் 90 நாட்களுக்கு 8 மருத்துவ அலுவலர்களுக்கான ஊதியம் ரூ.14,40,000/- (8அலுவலர்கள் x 60000 x 3 மாதம்) தொகைக்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. செலவினத் தொகை ரூ.14,40,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை மாநில பேரிடர் மீட்பு நிதியிலிருந்து இம்மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள ரூ.1.00கோடி நிநியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**எச்7/4351/2021(மையம்)**

**தீர்மானம் எண்.436 (பொருள்—7): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பொது நிதி 2021–22ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 58/2021–22ன் வாயிலாக 23.07.2021 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்த ப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | வ. எண் | நிறுவனங்களின் பெயர் | ஒப்பந்த சதவீதம் | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| **பொது நிதி 2021–22** | | | | | |
| **தலைமை நீர்ப்பணி நிலையம்** | | | | | |
| 1 | ஸ்ரீரங்கம் கொள்ளிடம் ஆற்றங்கரை பகுதியில் அமைந்துள்ள நீரேற்று நிலையங்களில் உள்ள தானி யிங்கி கருவிகளுக்கு தேவையான சோடியம் ஹைப்போ குளோரைட் கிருமிநாசினி திரவம் வழங்கி, தானியிங்கி குளோரினேட்டர் கருவிகளை பராமரிப்பு செய்யும் பணி மதிப்பீடு ரூ .95.00 இலட்சம் | 1. | மெசர்ஸ்.தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சென்னை (1 லிட்டருக்கு ரூ.12.80 பைசா வீதம்) | 1.17% குறைவு | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சென்னை** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் **1.17 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| | | | குளோரினேட்டர் கருவி பராமரிப்பு | ரூ.7,950/– மாதாந்திர தொகை | |
| | | 2. | மெசர்ஸ்.ஸ்ருதி ஆலம் இண்டஸ்ட்ரிஸ், சென்னை (1 லிட்டருக்கு ரூ.13.25 பைசா வீதம்) | 2.36% அதிகம் | |
| | | | குளோரினேட்டர் கருவி பராமரிப்பு | ரூ.8,500/– மாதாந்திர தொகை | |

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள் ள பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தாருக்கு பத்தி எண்.6ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரை உறுதி செய்து வழங்கி ட வேண்டியதன் முக்கியத்துவத்தினை முன்னிறுத்தியும் , குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெசர்ஸ். தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் , சென்னை நிறுவனத்திடம் சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் தங்கு தடையின்றி வாங்கி பயன்படுத்தி கொள்ள பணி உத்தரவு வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கலாம்

**இ4/4456/2021/மையம்**

**தீர்மானம் எண்.437 (பொருள்–8): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – ப.மு.நெ. முஜிபுர் ரகுமான்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**